

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் 1.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலக புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ். இரகுபதி, கேஆர். பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, சிங்கம்புணரி பேரூராட்சித் தலைவர் ந.அம்பலமுத்து, துணைத் தலைவர் பி.செந்தில்குமார், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# பீஹார் தேர்தல் : தூசி படிந்த கதை!

**ராஜ்தீப் சர்தேசாய்**
*மூத்த பத்திரிகையாளர் மற்றும் 'இந்தியா டுடே' டெலிவிஷனின் பிரதான ஆலோசனை ஆசிரியர்.*



என்னைப் பொறுத்தவரையில் இந்த பீகார் தேர்தல் வாக்குகளை வாங்கும் தேர்தல் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது; வாக்குத்திருட்டு என்பதை மறந்து விடுங்கள்; நீங்கள் அதை வாங்க முடியும் பொழுது வாக்குகளை திருட வேண்டிய அவசியம் என்ன வந்தது? பீகாரில் ஒரு கட்டத்தில் இதுதான் நடந்தது. தேர்தல் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கும்போதும், மாதிரி நடத்தை விதிகள் அமலில் இருக்கும் போதும், 'முதலமைச்சர் பெண்கள் வேலைவாய்ப்பு' திட்டத்தின் (யோஜனா) கீழ் ஒரு கோடியை 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பத்தாயிரம் ரூபாய் ஒவ்வொருத்தர் வங்கி கணக்கிலும் போடுவது, என்பது ஒரு வெட்கக்கேடான நெறிமுறை அற்ற செயலாகும்.

நான், மிக வருத்தத்துடன் சொல்கின்றேன், இதை முற்றிலும் பலவீனமான, சமரசம் செய்யப்பட்ட தேர்தல் ஆணையம், ஒரு நடப்பில் இருக்கும் திட்டம் என்று சில 'மேற்கோள்கள்' காட்டி தெரிவித்து இருக்கிறது. தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்பு தொடங்கிய பண பரிமாற்றங்களின் ஒரு தொடர்ச்சியான திட்டம், இது சட்டபூர்வமாக இருக்கலாம், ஆனால் அது முற்றிலும் நெறிமுறை அற்றது எனலாம். நீங்கள் எந்த விதத்தில் பார்த்தாலும் அது களத்தில் செயல்படுகிறது. பெண்கள் எப்படி இருந்தாலும் நிதிஷ்குமார் மீது நல்லெண்ணம் கொண்டவர்கள். அவரது இந்த பத்தாயிரம் ரூபாய் ஒரு 'போனஸ்' என்று தான் சொல்ல வேண்டும்.

இந்த 'போனஸ்', நிதிஷ்குமார் அரசு கொண்டு வந்த மதுவிலக்கு அமலாக்குதல், பஞ்சாயத்துகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவர்களுக்கு இலவச சைக்கிள் (மிதிவண்டி) போன்ற நல திட்டங்களை மக்களுக்கு ஞாபகப்படுத்தியது. பெண்களுக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கும் ஓர் தலைவர் நிதிஷ் பாபு என்றும், அவர் நம்பக் கூடியவர் என்றும் இது உணர்த்துகிறது. அதனால் தான், இந்த தேர்தலில், பெண் வாக்காளர்கள், ஆண்களை விட அதிகமாக வாக்களித்தார்கள் என்று தேர்தலுக்கு பின் தெரிய வந்தது.

இந்த ஓர் அம்சத்தில் இருந்தே, நான் கூறுவதை நம்புங்கள், பீஹார் சட்டமன்ற தேர்தல் ஒரு நடந்து முடிந்த, தூசி படிந்த கதை என்றே தெரிகிறது.

### காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில்

# துணை முதல்வர் தலைமையில் அரசு விழா - குழந்தைகள் நாள் விழா!

## முதல்வரின் வாழ்த்துச் செய்தியை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாசித்தார்!

**சென்னை, நவ. 16 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சிவகங்கை மாவட்டம், காரைக் குடி, அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (14.11.2025) பள்ளிக் கல்வித் துறை, பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்ற அரசு விழா மற்றும் குழந்தைகள் நாள் விழாவில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குழந்தைகள் நாள் வாழ்த்துச் செய்தியை வாசித்தார்.**

**முதலமைச்சர் அவர்களின் குழந்தைகள் நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்கும் குழந்தைகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த குழந்தைகள் நாள் வாழ்த்துகள்!

நூலைப்படி சங்கத்தமிழ்
நூலைப்படி முறைப்படி
நூலைப்படி!
காலையிற்படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும் படி
நூலைப்படி!
கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி?
நூலைப்படி!

என்று பாவேந்தர் பாரதிதாசனார் அறிவுறுத்தியபடி, இனிமையான உங்கள் குழந்தைப் பருவத்தை நீங்கள் கல்வியில் செலவிட வேண்டும்! அனைத்துக் குழந்தைகளும் தரமான கல்வி பெற வேண்டும் என்பது தான் நமது அரசின் எண்ணம்!

எவராலும் அழிக்க முடியாத நிரந்தரச் சொத்து கல்வி மட்டுமே. நமது அய்யன் திருவள்ளுவரும் அழிக்கமுடியாத சிறந்த செல்வம் கல்வி என்கிறார்.

**"கேடில் விழுச்செல்வம்
கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்ற யவை"**

கற்பதில் இருந்து ஒரு குழந்தைகூடவிடுபட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ள நமது திராவிட மாடல் அரசு, குழந்தைகளுக்காகப் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திவருகிறது. மிகப்பெரிய சவால்களையும் குழந்தைகள் சந்திக்க ஏதுவாக நமது கல்வியில் பல்வேறு மேம்பாடுகளைச் செய்து வருகிறோம். குறிப்பாக, கல்வியில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறோம். அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் 'ஸ்மார்ட்' வகுப்பறைகள் நிறுவப்ப ட்டுள்ளன. நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. பாடப்பகுதிகள் டிஜிட்டல் பாடங்களாக மாற்றி அளிக்கப்படுகின்றன.

நம் குழந்தைகள் சோர்வடையாமல் ஆரோக்கியத்தோடும் உற்சாகத்தோடும் படிக்க வேண்டு மென்றுதான், காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இதனால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் ஊட்டச்சத்து உணவை உண்டு, கற்றலில் ஈடுபடுவதைக் கண்டு பூரிப்படைகிறேன்.

பல்வேறு போட்டிகள், விளையாட்டுகள், கொண்டாட்டங்கள், கலைத் திருவிழா, ஆற்றல் மன்றம், தொல்லியல் மன்றம், சுற்றுச்சூழல், வானவில் போன்ற மன்றங்கள், கல்விச் சுற்றுலாக்கள், தேசிய பசுமைப் படை, பாரத சாரண சாரணியர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், தேசிய பசுமைப் படை, நாட்டு நலப்பணித் திட்டம், மகிழ்முற்றம் போன்றவை மூலமாக நீங்கள் பயிலவும் பல்வேறு வாழ்வியல் திறன்களைப் பெறவும் திராவிட மாடல் அரசு எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

நம் குழந்தைகளின் கல்வி எக்காரணம் கொண்டும் தடைபடக் கூடாது என்பதற்காக, அரசு அதிக நிதியினை ஒதுக்கி உட்கட்டமைப்பு வசதிகளைப் படிப்படியாக மேம்படுத்தி வருகிறது. மலைப்பாங்கான பள்ளிகளில் உள்ள குழந்தைகள், பள்ளி செல்வதற்காக வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வி மட்டுமல்ல, உயர்கல்வியும் தடையில்லாமல் கிடைக்க அனைத்து முன்னெடுப்பு களையும் நமது திராவிட மாடல் அரசு வழங்கி வருகிறது.

அன்புக் குழந்தைகளே, உங்களின் கவனம் முழுவதும் படிப்பது மட்டுமின்றி, உடல், மன நலனைப் பராமரிப்பதிலும் இருக்க வேண்டும். இன்றைய உலகில் வேண்டாத பல்வேறு பழக்கங்களும் உங்களைச் சுற்றிலும் திசைதிருப்பக் காத்துக் கிடக்கின்றன. அதிக நேரத்தை இணையத்திலும் சமூக ஊடகங்களிலும் செலவிடுவது உங்களின் பகுத்தறியும் சிந்த னையைச் சிதைத்து, மூளையை மழுங்கடித்து, ஏதொன்றிலும் ஆழங்காற்படாமல் தடுக்கிறது. எனவே, எதையும் அளவோடு, அறிவோடு, முறையாகப் பயன்படுத்த வேண்டும். குழந்தைகளின் உடல்நலனை வலுவானதாக்க உடற்கல்வி உதவும். உள்ளரங்க மற்றும் வெளி விளையாட்டுகள் புத்து ணர்ச்சியும் உற்சாகமும் தரும்.

ஒரு தாயின் கரிசனத்தோடு தந்தையின் அக்கறையோடு தமிழ்நாட்டுக் குழந்தைகள் ஒவ்வொருவரின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை உறுதி செய்வதற்கு நானும் திராவிட மாடல் அரசும் என்றும் துணைநிற்போம்! நாளைய தமிழ்நாடு வலிமையான தமிழ்நாடாகத் திகழ உழைப்போம்!

இவ்வாறு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடலூர் கிழக்கு மாவட்ட கழக இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர,ஒன்றிய,நகர,பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம், காட்டுமன்னார்கோயில் எம்.ஆர்.கே கலையரங்கத்தில் நடைபெற்றது. அமைச்சர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். ஜி.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார். இதில் பிரபு கஜேந்திரன், இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., சம்பத் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், எம்.ஆர்.கே.பி.கதிரவன், அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல் மற்றும் பலர் பங்கேற்றனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2025) சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைகளின் சார்பில் நடைபெற்ற விழாவில், 2024–25 ஆம் ஆண்டிற்கு அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 114 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ. வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.



கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ , விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி K.S.மஸ்தான் எம்.எல்.ஏ ஆகியோர் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் விழுப்புரம், அரசு மகளிர் மாதிரி மேல்நிலைப் பள்ளியில், மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டியை வழங்கினார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், ம. ஜெயச்சந்திரன், தமிழ்ச்செல்வி பிரபு, இரா.சக்கரை, சித்திக் அலி மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகாசி சாட்சியாபுரம் மேம்பாலத்திற்கு தியாகி சங்கரலிங்கனார் பெயர்!

# முதல்வருக்கு சிவகாசி தொகுதி மக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றி!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் அறிக்கை!



*விருதுநகர் நவ. 16 -*

*சிவகாசி மாநகரச் செயலாளர் எஸ்.ஏ.உதய சூரியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*சிவகாசி சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சிவகாசி சாட்சியாபுரம் இரயில்வே மேம்பாலம் அமைத்து கொடுத்து அதற்கு தியாகி சங்கரலிங்கனார் மேம்பாலம் என்று பெயர் சூட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சிவகாசி தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்ட பின்பு நம் மாநிலத்திற்கு மதராஸ் மாகாணம் என்ற பெயர் ஏற்புடையதல்ல என்றும்,அதற்கு "தமிழ் நாடு "என்று பெயர் சூட்ட வேண்டும் என்று விருதுநகரில் போராடி உண்ணாவிரதம் இருந்து அந்த போராட்டத்திலேயே தனது உயிர் நீத்த சுதந்திர போராட்ட தியாகி விருதுநகர் சங்கரலிங்கனார் அவர்கள், தமிழ் பற்றின் மீது இருந்த காதலால் எந்த கொள்கைக்கும் சொந்தமானவர் என்று பேதம் பார்க்காமல், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தனிபெரும் கட்சியாக ஆட்சி அமைத்தவுடன் மதராஸ் மாகாணம் என்ற பெயரை நீக்கிவிட்டு "தமிழ்நாடு "என்று பெயர் சூட்டி அழகு பார்த்தார். இந்தியாவிலேயே தன் தாய்மொழியையே அதன் பெயராக கொண்ட மாநிலம் என்றால் அது தமிழ்நாடுதான் என்ற வரலாற்று சிறப்பை பெற்றுதந்து தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் உயிர் தியாகத்திற்கு மரியாதை செய்தார் அன்று .*

*இன்று தியாகி சங்கரலிங்கனார் மறைந்து 69 ஆண்டுகளுக்கு பின்பும் நமது கொள்கை மறவர்கள் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழியொற்றி தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டின் மானம் காத்து நல்லாட்சி நடத்தி வரும் நமது திராவிட நாயகர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் லட்சக்கணக்கான சிவகாசி பகுதி மக்களின் நீண்ட நாள் துயர் துடைத்த இந்த புதிய இரயில்வே மேம்பாலத்திற்கு தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் பெயர் சூட்டி சிறப்பு செய்தமைக்கு இந்த பகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி 14 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம், சூர்யா நகர் துவாதசாந்தம் மாநாட்டு மையத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள், நகர் நலச் சங்கத்தினர் உடன் பங்கேற்றனர்